# மாலை மணி

சென்னை 15—12—49 வியாழக்கிழமை


## விடுதலையும் கெடுதலையும் ஒன்றேயாகும்!

காண்போர்க்குக் களிப்பூட்டும் கவின்நகர் என்று பாரோர் புகழும் பெற்றி வாய்ந்த 'காஷ்மீர்', இன்று கேட்போர் சிரிக்கும் வகையில் வைக்கப்பட்டிருக்கிறது!

இந்தியா-பாக்கிஸ்தான் ஆகிய இருநாடுகளின், தனிப்பட்ட மாற்சரியங்களுக்கிடையே, உதைபடும் விளையாட்டுப் பொருளாக இருந்து வருகிறது காஷ்மீர்! அதன் நிலை, நிலையற்றதாக ஆக்கப்பட்டு விட்டது!

காஷ்மீர் பற்றிய தகராறுகளைத் தீர்த்துவைக்க, சென்ற ஒரு ஆண்டு காலத்திற்கு மேலாக முயன்று வருகிற ஐக்கிய நாடுகளின் காஷ்மீர் கமிஷன், தான் எடுத்துக் கொண்ட முயற்சிகளைப்பற்றி, அறிக்கை ஒன்று விடுத்துள்ளது இப்பொழுது.

காஷ்மீர் பற்றிய தகராறு தீர பெருந்தடைக் கறகளாக இருக்கும் முக்கிய மூன்று பிரச்சினைகள், (1) 'ஆஸாத்' படை பைசல், (2) இந்தியா பாக். இராணுவ வாபஸ் (3) வடக்கு காஷ்மீர் ஆகியவையாகும், என்னும், இம்மூன்றுபிரச்சினைகள் குறித்தும தெளிவான உறுதியான — உண்மையான முடிவுக்கு வர இரு நாடுகளும் ஒத்து வரவில்லை என்றும் ஐ. நா கமிஷன் அறிக்கை அறிவிக்கிறது.

காஷ்மீர் எந்தப்பக்கம் இருக்கவேண்டும் - இந்தியா பக்கமா அல்லது பாக்கிஸ்தான் பக்கமா என்பதை நிர்ணயிக்க, பொது வாக்கெடுப்பே உரியவழி என்று தீர்மானிக்கப்பட்டிருந்தும், வாக்கெடுப்பைச் சாத்தியமாக்கும் முறையில், சூழ்நிலை ஏற்படவில்லை என்று கமிஷன் தெரிவிக்கிறது. சூழ்நிலை ஏற்படாததற்குக்காரணம். மேற்கூறப்பட்ட மூன்று பிரச்சினைகள் குறித்தும் முடிவான முடிவு ஏற்படாததுதான் என்று அறிவிக்கப்படுகிறது.

காஷ்மீரில் தானிருக்க உரிமை உண்டென்றும், தன்னுடன் சமத்துவம் கொண்டாட பாக்கிஸ்தானுக்கு உரிமை இல்லை என்றும் இந்தியா வாதிட்டு நிற்கிறது.

இந்தியா-காஷ்மீர் இணைப்புச் சட்டம் பூர்ணமானதல்லவென்றும், 1947 ஆகஸ்டு 15-ந் தேதி யன்றே பாக்கிஸ்தானுடன் நடப்பு நீடிப்பு ஒப்பந்தம் செய்து கொண்டுவிட்டதாகவும், உள்ளூர்ப் படைகளான ஆஸாத் துருப்புகளைக் கலைப்பதானல், அதற்கேற்ப சமஸ்தானப் படைகளோ, எஞ்சியுள்ள இந்தியத் துருப்புகளோ கலைக்கப்படுவதும் அவசியமென்றும், வடகாஷ்மீரில் பொறுப்பேற்க இந்தியாவுக்கு உரிமையே கிடையாதென்றும் பாக்கிஸ்தான் அறிவிக்கிறது.

இவ்வாறு இந்தியா-பாக்கிஸ்தான் இருநாடுகளும் எட்டிக்குப் போட்டி போட்டுக் கொண்டு, காஷ்மீரைக் களமாக்கி வருகின்றன. இந்தியா—பாக்கிஸ்தான் சர்க்கார்களின் மனப்போக்குக்குக் காஷ்மீர் இரையாகிறது. இரண்டு நாடுகளும் தங்கள் தங்கள் வீராப்புகளை விடாப்பிடியாகச் சாதிக்க நினைக்கின்றனவேயல்லாமல், காஷ்மீரைப் பற்றியோ, அங்குள்ள மக்களைப் பற்றியோ கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இரண்டு நாடுகளிடையேயும் இல்லாத காரணத்தால்தான், தகராறு தீர இன்னமும் வழியேற்படவில்லை என்று ஐ. நா. கமிஷன் கூறுகிறது.

கட்டாயப் பஞ்சாயத்து முறை மூலமல்லாது வேறு வகையில் பிரச்சினையைத் தீர்த்து வைக்க இயலாது என்பதை ஐ நா கமிஷன் தெளிவாக்குகிறது.

காஷ்மீரின் எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டியவர்கள் காஷ்மீர் மக்களே யல்லாமல், இந்தியாவாகவோ, அல்லது பாக்கிஸ்தானகவோ இருக்கக் கூடாது. காஷ்மீரை அநியாயமாக அபகரித்துக் கொள்வது என்பது இரு நாடுகளுக்கும் உரியகொள்கைஅல்லவெனில், இரண்டு நாடுகளும் தம் சக்தியையும் செல்வாக்கையும் மீட்டுக்கொண்டு, ஓட்டெடுப்புக்கு இடமளிப்பதே நீதியும், நேர்மையுமான செயலாகும். இந்தியாவும், பாக்கிஸ்தானும் அந்தப்படி விலகி நிற்கவேண்டும் என்று. ஐ. நா. பஞ்சாயித்து வற்புறுத்துமாயின், அதற்கு இணங்கி நடக்க இந்தியா, பாக்கிஸ்தான் இருநாடுகளும் ஒப்பவேண்டும்.

இரு நாடுகளையும் சேர்ந்த எந்தவிதத் தலையிடுதலும் இல்லாமல், காஷ்மீர் வாக்கெடுப்பு நடைபெற்றால்தான், உண்மையான — உறுதியான முடிவு ஏற்பட வழியேற்படும். இதைச் செய்ய ஐ. நா. அவை முன் வரவேண்டும். இதற்கு இருநாடுகளும் ஒத்துவர எண்ணமில்லை என்றால், இரண்டு நாட்டிற்கும் குரோதம்தான் முக்கியமே யொழிய, உண்மைக் கொள்கை அல்ல என்பது தானகப் பெறப்படும். ஆகவே, அதற்கு இடந்தராமல் இரு அரசாங்கமும் பார்த்துக் கொண்டு, உலகில் நற்பெயரோடு நின்று நிலவ முயலல் வேண்டும்.

காஷ்மீரின் எதிர்காலத்தைப் பற்றிய முடிவு, காஷ்மீர் மக்களின் கையில் இருக்க வேண்டும். இல்லையாயின் காஷ்மீர் விடுதலையும் கெடுதலையும் ஒன்றேயாகும்!

## அணுக்குண்டு அமெரிக்காவுக்கு ஆத்மீகப் பசி!

### வர்த்தகத்துக்கு வழி காட்டுகிறோம்; பதிலுக்கு ஆத்மீகம் தாருங்கள் என்கிறது

### அமெரிக்க வேதாந்த சங்கத் தலைவரின் அதிய ஆலோசனை!

"இந்தியாவும், அமெரிக்காவும் எதிர்காலத்தில் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்க முடியும்.

அமெரிக்கா தனது வர்த்தக நுட்பங்களை இந்தியாவுக்கு அளித்து, பதிலுக்கு இந்தியா விடமிருந்து ஆத்மீக தத்துவங்களைப் பெறலாம்.

அமெரிக்கர்கள், வரவர மதப் பற்றுடையவர்களாகிக் கொண்டு வருகின்றனர். அவர்களுடைய ஆத்மிக விருப்பங்கள் பூர்த்தியாக கிறிஸ்தவ மதம் போதாதென்று நினைக்கின்றனர்.

தியானம் என்பது, கிறிஸ்தவ மிஷினரிகளுக்குத் தெரியாது. ஆத்மீக வாழ்க்கைக்குத் "தியானம்" மிகவும் முக்கியமானது. ஆகவே, அமெரிக்காவில் வேதாந்தத்துக்கு முக்கிய ஸ்தானம் அளிக்கப் பட்டிருக்கிறது."

என்று வாஷிங்டன் வேதாந்த சங்கத் தலைவர் தோழர் சி. [illegible]சன் கூறுகிறார்.

உலகத்தில் பல நாடுகளுக்கிடையே பண்டமாற்று நடைபெறுவதை நாம் அறிவோம். அப்பண்டமாற்று முறையால் அந்தந்த நாடும் தனது பொருளாதார நிலையைச் சீர்படுத்திக் கொண்டு நாட்டு மக்களுக்கு நல்வாழ்வை வளர்க்க முயல்வது தான் வழக்கம். ஆனால், அமெரிக்க வேதாந்த சங்கத் தலைவருக்கு இது பற்றிக் கவலையே இல்லை. இந்தியாவிடமிருந்து ஆத்மீகத்தைப் பண்டமாற்றாகப் பெற விரும்புகிறார்.

கிறிஸ்தவ மதம் போதிக்கும் ஆத்மீகம் அமெரிக்காவின் ஆத்மீகப் பசியை அடக்கப்போதவில்லையாம்! ஆகவே இந்தியாவின் ஆத்மீகத்தைக் கொஞ்சம் அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யுங்கள்; பதிலுக்கு நாங்கள் வர்த்தக நுட்பங்களை உங்களுக்குத் தருகிறோம் என்று கூறும் அந்த வேதாந்த சங்கத் தலைவரைக் கேட்கிறோம், "ஐயா, வேதாந்த சங்கத் தலைவரே! தங்கள் ஆத்மீகப் பசியை நாங்கள் நன்கு அறிந்து கொண்டோம். ஆனால், அந்தப் பசியைப் போக்க கிறிஸ்து மதம் போதவில்லை என்று, இந்து மதத்தை நாடுவதாக கண்டோம் [illegible] எனினும், இந்து மதம் காட்டும் ஆத்மீகம், இந்த நாட்டுக்கே பயன்படவில்லை. பயன்படாதது மட்டுமல்ல; பாதகமும் விளைத்திருக்கிறது. இந்தியாவின் ஆத்மீகம் எங்களுக்கு அளித்திருக்கும் பரிசுகள் என்ன தெரியுமா? காயம் அநித்யம், உலகம் மாயை, மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை இம்மூன்றும மனிதனுக்கு இருக்கக் கூடாதவை! ஆனால், நால்வருணம் உண்டு, அதிலே மேல்கீழ் உண்டு; உன்னை ஒரு சாரார், உழைக்க ஒரு சாரார் என்ற நிலையுண்டு என்பவைகளே, இந்தியாவின் ஆத்மீகம். இந்திய மக்களுக்கு அளித்திருக்கும் நீதியும், பரிசுகளுமாகும்!

இப்படிப்பட்ட அதிசய ஆத்மீகத்தையா தாங்கள் விரும்புகிறீர்கள்! அட ஞானமே, தாங்களுக்கு ஏனோ இந்த மதி! அமெரிக்கா பொன் விளையும் பூமி, உல்லாசப் பூமியின் உறைவிடம், உலகையே கட்டியாள வேண்டும் என்ற ஆசைக் கோபுரங்களின் பாசறை. இவ்வளவும், மண், பெண், பொன் மூன்றிலும் அளவுகடந்த பற்றுவைத்திருக்கும் அமெரிக்காவுக்கு. இந்த மூன்று ஆசையும் கூடாது என்னும் ஆத்மீகம் எப்படி ஜீரணமாகும்! என்று.

சரி, தோழர் [illegible]சன் விருப்பப்படியே அமெரிக்கா ஆத்மீகத்தை ஏற்றுக்கொள்வோம். அவ்வாறு ஆத்மீகத்தில் அக்கறை கொள்ளும் நாட்டுக்கு அணுகுண்டு எதற்கு என்று கேட்கிறோம். ஒரு புறம் அணுகுண்டு ஆராய்ச்சி, மற்றொரு புறம் ஆத்மீக ஆராய்ச்சி! என்னவிந்தை! உலகை ஏமாற்றவா இத்தகைய இரட்டை வாழ்க்கை. சரி, அணுகுண்டு அமெரிக்காவும், ஆத்மீக இந்தியாவும் எப்படியேனும் கட்டிப்புரளட்டும். இவ்விரு நாடுகளுக்கும் காலம் தக்க பாடம் கற்பிக்கட்டும்.

## அறிவுக் கதிர்!

மக்களனைவரும் ஏற்றத்தாழ்வின்றி சரிசமமாகவே படைக்கப்படுகின்றனர். ஆண்டவன் அவர்களுக்கு என்றும் பறிபோகக்கூடாத நிலையான உரிமைகளை அளித்துள்ளான். உயிர் வாழ்க்கை, சுதந்தரம் இன்ப நாட்டம் ஆகியவை இவ்வுரிமைகளுள் அடங்கும். இவ்வுரிமைகளைப் பாதுகாக்கவே மக்களிடையே சர்க்கார்கள் ஏற்படுகின்றன இங்கு சர்க்கார்கள் தம் அதிகாரத்தை மக்களின் அனுமதிமீதே பெறுகின்றன. எந்த சர்க்காரேனும், இந்நோக்கங்களுக்கு அழிவு ஏற்படுத்துமாயின், அதனை மாற்றவோ, அடியோடு ஒழித்துப் புதியதொரு சர்க்காரை அமைக்கவோ மக்களுக்கு உரிமையுண்டு.

—ரூஸ்ஸோ.


திருச்சி மாவட்ட

# தி. மு. கழக மாநாடு

நாள்: 1--1--1950 ஞாயிற்றுக்கிழமை

இடம்: வேலாயுதம் பந்தல்

தலைவர்: கோவில்பட்டி ஈ. வி. அ. வள்ளிமுத்து

துவக்கிவைப்பவர்: பெத்தாம்பாளையம் பி. பழனிச்சாமி

இரவு

தோழர் அண்ணாத்துரையும் அவரது குழுவினரும் நடிக்கும் நாடகம்] நடைபெறும்

கட்டணம்: வரவேற்புக் குழு உறுப்பினர்—ரூ. 5

பிரதிநிதி (உணவு உள்பட)—ரூ. 2

எம். எஸ். மணி,
ஜி. பராங்குசம்,
செயலாளர்கள்.

என். சங்கரன்,
வரவேற்புக் கழகத் தலைவர்.


## சுதந்தர இயக்கத் தலைவர்மீது கைக் குண்டு வீச்சு

### எரீட்ரியாவில் சம்பவம்

கெய்ரோ, டிச. 13—
எரீட்ரிய சுதந்திர இயக்
கத்தைச் சேர்ந்த மூன்று தலை
வர்கள் மீது இரு தேசிகள்
கைக் குண்டு வீசினர் என்றும்
[illegible] குண்டுகள் வெடிக்கவில்லை
எனவும், போலீசார் உடனே
[illegible] குண்டு வீசிய
[illegible] சென்றனர்
[illegible] தெரிகிறது. அஸ்மா
[illegible] இருப்பர்கள்
சில மணிகளுக்குள் [illegible] இரு
[illegible] பிரிட்டிஷ் விளம்பர
அதிகாரிகளுக்கும் [illegible]
[illegible] இருக்கிறார்கள்,
எத்யோபியாவுடன் எரீட்ரியா
சேருவதில் யாரும் தலையிடக்
கூடாதென்று அதில் எச்சரிக்
கப் பட்டிருக்கிறது. —ஆஜாத்

